www.Padasalai.Net

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6**
ந.க. எண். 1680/அ1/இ4/2024, நாள்: 22.10.2024.

******

பொருள்: பள்ளிக் கல்வி – கூடுதல் பொறுப்பு – திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.இரா.புண்ணியகோட்டி என்பார் 16.10.2024 முதல் 21.11.2024 முடிய மருத்துவ விடுப்பு கோரியுள்ளமை – அன்னார் விடுப்பில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடத்தில்– திருப்பத்தூர் மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை) திரு.இ.வெங்கடேசபெருமாள் என்பவரை – முழுக்கூடுதல் பொறுப்பு அலுவலராக நியமனம் செய்து ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை : திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம், ந.க.எண்.3746/அ1/2024, நாள்: .10.2024.

---

திருப்பத்தூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.இரா.புண்ணியகோட்டி என்பவருக்கு உடல்நலமின்மை காரணமாக வேலூர் சி.எம்.சி மருத்துவமனையில் 16.10..2024 முதல் சிகிச்சை பெற்று வருவதால், மருத்துவரின் ஆலோசனையின்படி 16.10.2024 முதல் 21.11.2024 முடிய மருத்துவ விடுப்பில் செல்வதால் ஏற்படும் காலிப்பணியிடத்தில், அன்னார் தனது விடுப்பு முடிந்து மீள பணியில் சேரும் வரை அப்பணியிடத்திற்கு கீழ்க்காணுமாறு முழுக்கூடுதல் பொறுப்பு அலுவலர் நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| விடுப்பில் சென்றுள்ள அலுவலரின் பெயர் மற்றும் அலுவலக முகவரி | தற்போது முழு கூடுதல் பொறுப்பு அலுவலராக நியமிக்கப்படும் அலுவலரின் பெயர் மற்றும் முகவரி | காரணம் |
|---|---|---|
| திரு.இரா.புண்ணியகோட்டி, முதன்மைக்கல்வி அலுவலர், திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | திரு.இ.வெங்கடேசபெருமாள், மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம். | மருத்துவ விடுப்பு |

மேற்படி கூடுதல் பொறுப்பேற்கும் அலுவலர், விடுப்பிலுள்ள அலுவலர் மீளப் பணியேற்கும் வரை உண்டியல்கள் ஏற்பளிப்பது உள்ளிட்ட நிதி அதிகாரத்துடன் முழுக் கூடுதல் பொறுப்பில் செயல்படவும் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

பொறுப்பு ஏற்பு மற்றும் ஒப்படைப்பு அறிக்கைகளை உடனடியாக இவ்வலுவலகத்திற்கும் தொடர்புடைய இதர அலுவலகங்களுக்கும் அனுப்புமாறு சார்ந்த அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

**பெறுநர்**

சார்ந்த அலுவலர்கள்.

**நகல்:**
1. மாவட்டக்கல்வி அலுவலர் (இடைநிலை), திருப்பத்தூர்.
2. முதன்மைக்கல்வி அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.
3. சார்ந்த கருவூல அலுவலர்.